1984 பிப்ரவரி 17]

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே, சென்னை நகரில் சைதாப் பேட்டையில் பல சலவைத் தொழிலாளர்கள். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள குளத்தைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொரு குளமாகக் குறிப்பிட்டால் எப்படி ?

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே, நினைவுபடுத்துவதற்காகக் கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சரி, கேளுங்கள்.

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே, சைதாப்பேட்டையில் (சென்னையில்) ஏறக்குறைய பத்தாயிரம் சலவைத் தொழிலாளர்கள் ஆற்றோரத்தில் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். மழைக்காலங்களில் அவர்கள் வீடுகளில் வெள்ளம் புகுந்து மிகவும் அவஸ்தைப்பட்டு வருகிறார்கள். இந்த இடங்களில் சுவரெழுப்பிட, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே மாநகராட்சி ஆணையரிடத்தில் ஏற்கெனவே கூறி இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருக்கிறேன்.

Bala Sevikas

* 6 *Q*.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of Bala Sevikas serving as on 1st February 1983, at the Schools under the control of the Dindigul Municipality; and

(*b*) the number of Bala Sevikas, whose services were regularised as on 1st February 1983?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 24.

(இ) ஒருவரும் இல்லை,

[1984 பிப்ரவரி 17

திரு. பா. ரா. தாமஸ்: தலைவரவர்களே, இந்த 24 பால சேவகிகள் ஏறத்தாழ கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு முறையான ஊதியம் வழங்கப்படவில்லை. முறையான சலுகைகள் வழங்கப்படவில்லை. 1—10—1980 ஆம் தேதியன்று அவர்கள் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு. ஊதிய விகிதம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட சலுகையை 1—4—1983-லே வழங்கப்பட்ட ஆணையின் மூலமாக 1983-லிருந்து நிறுத்தி மாதம் 20 ஆகப் பிடித்தம் செய்து, திரும்பக் கட்ட வேண்டுமென்று அச்சுறுத்தப்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் முறையாக 10 ஆண்டுகள் முடித்த தேதியிலிருந்து அவர்களை வரன்முறை செய்து, அவர்களுக்கு முழுமையாக எல்லாச் சலுகைகளையும் அளிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணை வழங்குவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, திண்டுக்கல் நகராட்சியில் 24 பாலசேவகிகள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முழு நேர ஊழியர்களல்ல. பகுதி நேர ஊழியர்கள். அப்படி பகுதி நேர ஊழியர்களாக இருந்தவர்களைத்தான், புரட்சித் தலைவர் அரசு 11—10—1979 அன்று ஒரு ஆணையின் மூலமாக நிரந்தரப் பணியாளர்களாக்கி, 200 ரூபாய் அடிப்படை ஊதியம் அளித்தார்கள். அதற்குப் பின்னாலே ஏற்பட்ட அரசியல் விபத்து காரணமாக 17—2—1980-லே இந்த ஆட்சி கலைக்கப்பட்டு, பின்னர் 1—3—1980 ஆம் தேதியன்று மற்றொரு ஆணை மூலமாக இவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக இருக்கக் கூடாது, பகுதி நேர ஊழியர்களாகத்தான் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. அதற்குப் பின்னால் கொடுத்த பணத்தை ரிகவரி செய்து, மீண்டும் அரசாங்கம் வசூலிக்க வேண்டுமென்ற முறையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த நேரத்தில், அப்படி பிடித்தம் செய்யக் கூடாது, கொடுத்தது கொடுத்ததாக இருக்கட்டும் என்று சொல்லி 18 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தில் பகுதி நேர ஊழியர்களாகப் போட்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்தில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய கருணை உள்ளத்திற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஊழியர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், பிடித்தம் செய்யாமல் நிறுத்தியதற்காக. இப்போது விபத்து போய்விட்ட நிலையில், மீண்டும் ஆட்சியில்

1984 பிப்ரவரி 17]

உள்ளபோது, கருணை உள்ளத்தோடு 10 ஆண்டுகள் முடித்த அனைவரையும் வரன்முறை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. அமைச்சரவர்கள் நகராட்சியிலிருந்து விவரமான குறிப்பைக் கேட்டு, தெரிந்துகொள்ளலாம். அவர்கள் காலையிலிருந்து இரவு 8 மணிவரையில் வேலை பார்க்கிறார்கள். எனவே அவர்கள் பகுதி நேர வேலை பார்க்கவில்லை என்று கூறி, இதை மறுபரிசீலனை செய்து, அவர்களை முழு நேர ஊழியர்களாக்கி எல்லாச் சலுகைகளையும் அவர்களுக்கு வழங்குவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று கூறினேன். இருக்கின்ற பாலசேவிகள் எல்லாம் ரிடையரிங் ஸ்டேஜில், அதாவது 40, 45, 50, 53 வயதில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இவர்களை நிரந்தரமாக்க முடியுமா. அப்படி நிரந்தரமாக்கினால் பென்ஷனரி பெனிபிட்ஸ் போன்றவைகள் அவர்களுக்குக் கிடைக்குமா என்பதையெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: விபத்து ஏற்பட்டு, இப்போது விபத்திலிருந்து மீண்டவுடன், என்னென்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளதோ, அதை மாற்றுவதுதான் முறை. 1980-ல் விபத்து ஏற்பட்டு, 1980 லேயே முடிந்துவிட்டது. இப்போது 1984. 4 வருடங்களாக அதை மாற்ற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கு நடவடிக்கை அரசு மிக விரைவில் எடுத்து, அதை அறிவிக்குமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 1—3—1980-ல் அந்த ஆணை போடப்பட்டது. 1—5—1980-லே கொடுத்த பணத்தைத் திரும்பக் கட்ட வேண்டுமென்று சொல்லி, ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஆணை போடப்பட்டது. இந்த அரசு மறுபடியும் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதற்குப் பிறகு, அரசு பரிசீலித்து இன்றைக்கு நிதித் துறையிலே அது பெண்டிங்கில் இருக்கிறது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.